2004 நவம்பர் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அன்பழகன்.

திரு. ஜெ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாகராய நகர் தொகுதியிலே கடுமையான போக்குவரத்து நெருக்கடி இருக்கிற காரணத்தினால் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் ரங்கராஜபுரம் இரயில்வே பாதையில் மேம்பாலம் கட்டப்படும் என்று அரசு அறிவித்திருக்கிறது. அந்தத் திட்டம் தற்போது எந்த அளவில் இருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்குத் தனிக் கேள்வி போடுங்கள். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், என்ன?

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது செறிவு என்று சொன்னார்கள். செறிவு என்று சொன்னால் அதற்கான தகுந்த விளக்கத்தை நான். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கத்தை என்னிடம் கேளுங்கள். நான் சொல்கிறேன். அடர்த்தி என்று பொருள். அவ்வளவுதான். மக்கள் நெருக்கடியாக இருக்கிறார்கள் என்று அர்த்தம்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துச் செறிவு என்றால் அந்த இரயில்வே தடத்தினை எத்தனை தடவை போக்குவரத்து வாகனங்கள் கடக்கின்றன என்பதைக் கணக்கிடுவது. அதைக் கணக்கிட்டு, ஒரு நாளைக்கு அந்த இரயில் தடத்தில் இரயில் செல்லும்போது எத்தனை தடவை அந்தக் கடவு மூடப்படுகிறது என்பதைப் பெருக்கினால் ஒரு இலட்சம் வர வேண்டும். மூடப்படுகின்ற எண்ணிக்கையையும் போக்குவரத்துச் செறிவினையும் பெருக்கினால் ஒரு இலட்சம் வர வேண்டும். ஒரு இலட்சத்திற்குக் குறைவாக இருந்தால் விதிமுறைகளின்படி அங்கே மேம்பாலம் கட்டுவதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், தமிழ் tuition வைத்துக்கொள்வது நல்லது என்று கருதுகிறேன்.

வினா எண் 32, திரு. ச. ராமராஜ், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

[2004 நவம்பர் 18

32—

இருவழிப் பாதை

*** 24603—திரு. ச. ராமராஜ்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், போடி தொகுதியில் உத்தமப்பாளையம் — தேவாரம் வரை ஒருவழிப் பாதையாக உள்ளதை இருவழிப் பாதையாக மாற்றிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ச. ராமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தேனி மாவட்டம், போடி தொகுதி, கம்பம் தொகுதி மக்களுடைய நீண்ட காலக் கோரிக்கை. மேற்குத் தொடர்ச்சி மலையில் உலகத் தரம் வாய்ந்த ஏலக்காய், அப்பகுதியின் வர்த்தக சபை மக்களால் பயிரிடப்படுகிறது. அதிகப் போக்குவரத்து உள்ள, நீண்ட அதிக கிலோ மீட்டர் உள்ள, 50 கிலோ மீட்டர் உள்ள பாதையை இரு வழிப் பாதையாக மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை ஏற்று நிறைவேற்றித் தருமாறு மிக்கப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலை உத்தமப்பாளையம்—போடி சாலை கிலோ மீட்டர் 0/0-லிருந்து 31/8 நீளம் கொண்ட மாநிலச் சாலையாகும். இதில் உத்தமப்பாளையம் முதல் தேவாரம் வரை கிலோ மீட்டர் 0/0 முதல் 12/2 பகுதியாகும். இதில் 2 கிலோ மீட்டர் நீளம் இரு வழித் தடமாகவும், 1 கிலோ மீட்டர் நீளம் இடைவெளித் தடமாகவும், 9.2 கிலோ மீட்டர் நீளம் ஒரு வழித்